2015 செப்டம்பர் 1]

எல்லா விவரங்களையும் புள்ளிவிவரத்தோடு நாங்கள் வைத்திருக்கிறோம். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மலர்ந்த பிறகு, எடுக்கப்பட்ட பாலப் பணிகள் பற்றிய விவரங்கள் அனைத்தையும் வைத்திருக்கிறோம்; நிறைய விவரங்கள் இருக்கின்றன. ஆகவே, அவர்களுடைய ஆட்சிக் காலத்தைப் பற்றி நாங்கள் சொல்வதற்கு முடியாது. ஆனால், எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி மலர்ந்த பிறகு இந்த 4 ஆண்டுக் காலத்திலே, மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்றத் தொகுதியிலே மேற்கண்ட பணிகளெல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றேன். எப்பொழுது பார்த்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்களுடைய தொகுதியிலே எந்தப் பணிகளும் நடைபெறவில்லை என்று குறிப்பிடுகிறார்கள். ஆகவே, புள்ளிவிவரத்தோடு இதனை நான் குறிப்பிட விரும்புகிறேன் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

185—

தொழிற்பயிற்சி நிலையம்

***55567—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை பகுதியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்தணி தொகுதி, ஆர்.கே. பேட்டை பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை

என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்பின் திருவுருவமாக, ஏங்கி நிற்கும் ஏழைகளைத் தாங்கி நிற்கும் தாயாக, தமிழினத்தின் போர் வாளாக, திராவிட வரலாற்றின் நான்காம் அத்தியாயமாக, அரசியல் வேதமாக, ஏழை எளியவர்களின் பொற்காலமாக, சகலமுமாய் மனிதநேயத்தின் மறுவடிவமாய் விளங்கி கருணை மழை பொழியும் எங்கள் காவல் தெய்வமாக, (மேசையைத் தட்டும் ஒலி) இயக்கத்தின் ஆதாரமாக, நாளைய தேசத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக, துணிவின் சிகரமாக, அறிவின் பேரொளியாக, அலைமோதும் பெருங்கடலாக, ஆர்ப்பரிக்கும் காவியமாக, போர்ப் படைக்குக் புத்துணர்ச்சி தருகின்ற புறநானூற்றின் புதுவடிவமாக, மக்கள் வளம் பெருக்கும் மாதவமாக, மக்கள் நலன் காக்கும் மாதரசியாக, முப்பெரும் தேவியரும் ஓர் உருவில் அவதரித்த ஒப்பில்லா மூலவராக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நோக்கம் இந்தியாவிலேயே, தமிழகம் தொழில் துறையில் முதலிடம் வகிக்க வேண்டும் என்பது. அதை மேலும் சிறப்பிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே, உலக அளவிலே இருக்கின்ற முதலீட்டாளர்களைத் தமிழகத்திற்கு வரவழைப்பதற்காகவும், தொழிற்சாலைகளை உருவாக்குவதற்காகவும் மாண்புமிகு அம்மா அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். உலக அளவிலே உள்ள தொழிற்சாலைகளை தமிழகத்திலே ஏற்படுத்தும்பட்சத்திலே, அதற்குத் தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் மிகவும் அவசியம். எல்லா இளைஞர்களுக்கும் வேலை கிடைக்க வேண்டுமென்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நோக்கம். எந்த ஒரு வேலையாக இருந்தாலும், பயிற்சி பெற்றிருந்தால்தான் அந்த வேலையைச் சிறப்பாகச் செய்ய முடியும். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால். . .

2015 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. மு. அருண் சுப்பிரமணியன்: திருத்தணி தொகுதியினுடைய மேற்குப்புறத்திலே இருக்கக்கூடிய அனைத்து சிப்காட் தொழிற்சாலைகளிலும் வேலை தேடி திருத்தணியில் இருக்கிற இளைஞர்கள் செல்கிற நேரத்திலே, I.T.I. படித்திருக்கிறீர்களா, D.M.E. படித்திருக்கிறீர்களா என்று கேட்கிறார்கள். அப்படிப் படித்திருந்தால் உடனே வேலை; இல்லையென்றால், அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. ஆக, I.T.I. அல்லது D.M.E. படித்திருந்தால் மட்டும்தான் இந்தத் தொழிற்சாலைகளில் நேரடியாகவும், மறைமுகமாகவும் அவர்களுக்கு வேலை கிடைக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி ஒரு வறட்சியான தொகுதி. அங்கே நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே நெசவாளர்களுக்கும் வேலை குறைவாக உள்ளது. ஆகவே, அங்கேயிருக்கின்ற இளைஞர்களுக்கு வேலை கிடைப்பதற்கு அந்தப் பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு வேண்டுகோள்களை எல்லாம் உரிமையோடு எடுத்து வைத்துள்ளார்கள். திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையங்களை அதிகமாக உருவாக்கிட வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்களால், திருவள்ளூர் மாவட்டத்திலே மட்டும், இதுவரை மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு, 1,292 இருக்கைகளுடன் அம்பத்தூர் உள்ளிட்ட இடங்களில் சிறப்போடு இயங்கி வருகின்றன. அதேபோன்று, திருவள்ளூர் மாவட்டத்திலே 13 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 1,884 இருக்கைகளுடன் சிறப்போடு செயல்பட்டுக்

கொண்டிருக்கின்றன. அதே மாவட்டத்தைச் சேர்ந்த திருத்தணி தொகுதியைப் பொறுத்தமட்டில், இரண்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 252 இருக்கைகளோடு, இன்றைக்குச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அங்கே தொழிற்பயிற்சி நிலையங்கள் அதிகமாக வேண்டுமென்று கேட்டார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், தமிழ்நாட்டில் இந்த நான்கு ஆண்டுகளிலே மாத்திரம், 15 புதிய தொழிற்பயிற்சி நிலையங்கள் 77.77 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஏற்படுத்தப்பட்டு, மாணவர்களுக்குச் சிறப்பாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, அங்கே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, இனிவரும் காலங்களில் அந்தப் பணியை அந்தப் பகுதியில் செய்வதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கும்போது, நெசவாளர்களுக்கு அங்கே வேலை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். 2016—ல், பொங்கலுக்காக வழங்கவேண்டிய விலையில்லா வேட்டி—சேலைகளைத் தயாரிக்கும்பொருட்டு, திருவள்ளூர் மாவட்டத்தில், திருத்தணி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அனைத்து நெசவாளர்களுக்கும் இலவச வேட்டி-சேலை திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய திட்டங்களில் ஒன்றான, சீருடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், இரண்டு மாதங்களுக்கு முன்பாக அந்தப் பகுதியிலே உள்ள நெசவாளர்கள் துப்பட்டாவை உற்பத்தி செய்தார்கள். ஆகவே, தொடர்ச்சியாக அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.